தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 25-5-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் வேளாண்மைக் கலைக்களஞ்சிய உருவாக்கப் பயிலரங்கம்

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மைக் கலைக்களஞ்சிய உருவாக்கப் பயிலரங்கம் எதிர்வரும் மே திங்கள் 26, 27, 28 நாட்களில் நடைபெற இருக்கிறது. சென்னை தமிழ் இணையக் கலவிக்கழகமும் புதுதில்லி வேளாண் அறிவியல் தமிழ் இயக்கமும் இணைய நடத்தப்பெரும் இம்மூன்று நாள் பயிலரங்கை வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கு. இராமசாமி அவர்கள் மே 26ஆம் நாளன்று காலை 9 மணிக்குத் தொடங்கி வைக்கிறார். அதில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உட்பட 200 பேர் கலந்து கொண்டு 25,000-க்கும் மேற்பட்ட அறிவியல் கட்டுரைகளை உருவாக்கி இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்ய உள்ளார்கள்.

இவ்விழாவில் பல்வேறு செயல் திட்டங்களுடன் தமிழ் இணையக் கல்விக்கழகத் துணை இயக்குனர் பேராசிரியர் மா. தமிழ்ப்பரிதி, வேளாண் அறிவியல் தமிழ் இயக்க நிறுவனர் முனைவர் மு. முத்தமிழ்ச்செல்வன் ஆகியோர் நெறியாளர்களாகக் கலந்து கொள்கிறார்கள்.

வேளாண்மை அறிவியலின் முதன்மைக் கூறுகளான உழவியல், மண்ணியல், மரபியல், நோயியல், பூச்சியியல், தோட்டக்கலையியல், வனவியல், வேளாண் பொறியியல் உட்பட 25க்கும் மேற்பட்ட துறைகளில் தகுதியும் பட்டறிவும் தமிழார்வமும் கொண்டோரால் உருவாக்கப்படும் இக்கட்டுரைகள் இணையத்தில் பதிவேற்றப்படுவதால் கூகுள், விக்கிபீடியா போன்ற தளங்களில் அனைத்து வேளாண் சொற்களுக்கும் உரிய விளக்கங்களும் அறிவியல் உண்மைகளும் கிடைக்கப்பெறும். இதன் மூலம் உழவர்களும், மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும் பயனடைவார்கள் என இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளரும் வேளாண்மை முதன்மையர் முனைவர் ச, மகிமைராஜா அவர்கள் தெரிவித்தார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்